‘HE HATH MADE EVERYTHING BEAUTIFUL IN HIS TIME.’ - ECCL. 3:11

# *Holy Matrimony*



# JESIFER

*Weds*

# DIJO MATHISELVAN

on

Friday, the 15th of May 2026

at 10.00 a.m.

**at CSI Holy Trinity Church**

**Pannaivilai – 628 751.**

## பிரைடல் மார்ச் - பாடல் வரிகள் (தமிழில்)

இந்தப் பாடல் பொதுவாக பாடல் வரிகளை விட இசைக்கே (Instrumental) பெயர் பெற்றது. எனினும், கிறிஸ்தவ திருமணங்களில் பாடும் வரிகள்:

**பல்லவி:**

மணமகள் வருகிறாள், மகிழ்ந்து பாடுங்கள்,
மகிமை நிறைந்த மணநாளிதே!
இயேசுவின் ஆசியால் இணையும் கரங்கள்,
இன்ப நல்வாழ்வு மலரட்டுமே!

**சரணம் 1:**

அன்பு எனும் பாசத்தினால்,
அன்னை இல்லம் விடுத்து,
புது வாழ்வு தேடி,
புது இல்லம் புகுகிறாள்!
(மணமகள் வருகிறாள்...)

**சரணம் 2:**

வாழ்த்துக்கள் பாடுங்கள்,
வாழ்த்தி மகிழுங்கள்,
இறைவன் ஆசியால்,
இணைந்தே வாழட்டுமே!

(மணமகள் வருகிறாள்...)

ஆரம்ப ஜெபம்

Bridal March (English)

Here comes the bride,
All dressed in white,
Walking to her groom,
With love so bright.

Oh, say can you see,
By the light of her smile,
She's walking to the altar,
Down the aisle.

Faithfully guarded, remain behind,
Where the blessing of love shall preserve you!
Triumphant courage, love and happiness,
Joins you in faith as the most blessed of couples!

Rev.A.John Wesley
Pastorate Chairman
அருட்திரு. ஆ. ஜாண் வெஸ்லி
சேகரத் தலைவர்

அருட்திரு. J. அற்புதராஜ்
Pannaivilai

# ஏதேனில் ஆதி மணம்
Ethenil Aathi Manam

1. ஏதேனில் ஆதி மணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே

2. இப்போதும் பக்தி யுள்ளோர்
விவாகம் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்

3. ஆதாமுக்கு ஏவாளை
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்கிப்பெண்ணை
கொடுக்க வாருமே

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர்கள் இரு கையும்
இணைக்க வாருமே

5. மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே

6. நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து அன்பாய் வாழ்த்தி
மெய்ப் பாக்கியம் ஈந்திடும்

7. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து
பேர் வாழ்வு ஈந்திடும்

**குருவானவர் சொல்ல வேண்டியது**

பிரியமானவர்களே, **JESIFER & DIJO MATHISELVAN** ஆகிய இவ்விருவரையும் பரிசுத்த திருமணத்தில் இணைப்பதற்காகக் கடவுள் முன்னிலையில் நாம் கூடி வந்திருக்கிறோம். திருமண வாழ்க்கை கடவுளால் நியமிக்கப்பட்டது எல்லா மனிதரும் இதனை மேன்மையானதாகக் கொள்ள வேண்டுமென்று பரிசுத்த வேதாகமம் கட்டளையிடுகிறது. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து கானா ஊரில் தம்முடைய பிரசனத்தில் திருமண வாழ்க்கையை ஆசீர்வதித்தார்.

**திருமண வாழ்க்கையைக் குறித்து நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்வதைக் கேளுங்கள்...**

படைப்பு முதல் கடவுள் மனுக்குலத்தை ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகவே இனி அவர்கள் இருவரல்ல. ஒரே மாமிசமாயிருக்கிறார்கள்.

இப்படியிருக்க கடவுள் இணைத்ததை மனிதன் (பிரிக்கா) ருப்பானாக'' மாற்கு 10:6-9

...ஆகையால் திருமணத்தை ஒருவரும் அற்பமாய் எண்ணி, யோசனையின்றி செய்யாமல், கருத்தோடும், திருமணம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நோக்கங்களைச் சிந்தித்து அதனைச் செய்வது அவசியம்.

கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் இன்பத்திலும், துன்பத்திலும் தங்கள் வாழ்நாள் முழுவதும், தோழமையும், உதவியும், ஆதரவும் அளிக்கவும் கடவுள் தாமே படைத்து கிறிஸ்துவில் மீட்டுக் கொண்ட மனித சுபாவ உணர்ச்சிகளை அவரே தூய்மைப்படுத்தி வழி நடத்தவும், குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்து கடவுளுக்கு மகிமையாக, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பற்றிய அறிவில் வளர்க்கப்படவும்... இவ்விதமாய், திருமணத்தை மேன்மையுள்ளதாக கருதுவதால் மனுக்குலம் உறுதியான அடிப்படையில் நிலைத்து நிற்கவுமே, திருமணம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

## *திருமணம்*
**(சபையார் கவனிக்கவும்)**

**குரு:** †ஆகிய இவ்விருவரும் இந்த தூய நிலைமையில் ஒன்றாக்கப்பட அதற்காக இங்கே வந்திருக்கின்றார்கள். ஆனால் உங்களில் யாருக்காவது திருச்சபையின் நியமப்படியும், இந்திய நாட்டின் சட்டத்தின்படியும், இவ்விருபேருக்கும் திருமணம் நடத்தக் கூடாது என்று நியாயமான தடை ஏதாவது தெரியுமானால் அதை இப்போதே தெரிவிக்க வேண்டும். இல்லா விட்டால் இனி இதைக் குறித்து ஒருக்காலும் ஒன்றும் சொல்லக் கூடாது.

சபையார் உட்காரவும்!

**குரு:** நீங்கள் இருவரும் திருமணத்தில் ஒன்றாய் இணைக்கப்பட கூடாதபடி உங்கள் இருவரில் யாருக்காவது ஏதாவது காரணம் இருந்தால், அதை இப்பொழுதே தெரிவிக்கக் கடவுள் முன்னிலையில், உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகின்றேன்.

**ஜெபம் செய்வோம்...**

**ச**ர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய உதவியின்றி நாங்கள் யாதொன்றையும், தகுந்த முறையில் செய்ய திராணியற்றவர்கள். இவ்விருபேரையும் உமது பராமரிப்பின்படி இங்கே அழைத்து வந்தீர். ஆனால் உம்முடைய திருமண

ஒப்பந்தத்தில் உட்படவும், இவர்கள் கொடுக்கப் போகும் வாக்குறுதிகளை உண்மையாய் பாதுகாக்கவும், உம்முடைய பேரருளை இவர்களில் பெருகச் செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

**வாக்குகொடுத்தல்**

(குருவானவர் மணமகனைப் பார்த்து சொல்ல வேண்டியது)

**டிஜோ மதிசெல்வன்** ஆகிய நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழ **ஜெஸிபர்** –யை உனக்கு மனைவியாக ஏற்றுக் கொண்டு, சுகத்திலும், துக்கத்திலும் இவளை நேசித்து, ஆதரித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடு இருக்குமளவும், பிறர் முகம் பாராமல் இவளுக்கே கணவனாய் இருப்பாயா?

**மணமகன்:** இருப்பேன்

(குருவானவர் மணமகளைப் பார்த்து சொல்ல வேண்டியது)

**ஜெஸிபர்** ஆகிய நீ, தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழ **டிஜோ மதிசெல்வன்** -ஆகிய இவரை உனக்கு விவாக கணவராக ஏற்றுக் கொண்டு, இவருக்கு கீழ்படிந்து

பணிவிடை செய்து சுகத்திலும், சுகவீனத்திலும் இவரை நேசித்துக் கனப்படுத்தி , காப்பாற்றி நீங்கள் இருவரும் உயிரோடு இருக்குமளவும், பிறர் முகம் பார்க்காமல் இவருக்கே மனைவியாய் இருப்பாயா?

**மணமகள்:** இருப்பேன்

**ஆராதனை நடத்துகின்றவர் சொல்கின்றதாவது...**

**திருமணம் செய்ய இந்த மாப்பிள்ளைக்கு இந்த பெண்ணை கொடுக்கின்றது யார்?**

(மணமகளின் தந்தை மணமகளின் வலது கையை பிடித்து மணமகனின் வலது கையில் கொடுத்தப்பின் குருவானவர் சொல்ல மணமக்கள் பின்பற்றி சொல்ல வேண்டியது)

**ஜெஸிபர்** ஆகிய நான் உன்னை இன்று முதல் எனது விவாக மனைவியாக ஏற்றுக் கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், சுகவீனத்திலும், நாம் இருவரும் உயிரோடிருக்குமளவும் உன்னை நேசிக்கவும், ஆதரிக்கவும் வாக்குக் கொடுக்கிறேன்.

**டிஜோ மதிசெல்வன்** ஆகிய நான் உம்மை, இன்று முதல் எனது விவாக கணவராக ஏற்றுக் கொண்டு

கடவுளுடைய பரிசுத்த நியமத்தின்படி நன்மையிலும், தீமையிலும், வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், சுகவீனத்திலும், நாம் இருவரும் உயிரோடிருக்குமளவும் உம்மை நேசிக்கவும், ஆதரிக்கவும் உமக்கு கீழ்படியவும் வாக்குக் கொடுக்கிறேன்.

**திருமாங்கல்யத்தை பெறுதல்...**

**கீ.கீ 277 - புத்திக்கெட்டாத அன்பின்**

(திருமாங்ல்யம் ஆசீர்வதிக்கப்படும் போது அனைவரும் முழங்காலில் நின்று ஜெபமாக பாடவும்)

1. புத்திக்கெட்டாத அன்பின் வாரீர் பாரும்
உம் பாதம் அண்டினோம்
தேவரீர் விவாகத்தால் இணைக்கும் இரு பேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்

2. ஆ! ஜீவ ஊற்றே இவரில் உம்நேசம்
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம் பேரில் சாரும் ஊக்க விசுவாசம்
குன்றாத தீரமும் தந்தருளும்

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி
மெய்சமதானம் தந்து தேற்றுவீர்
வாழ்நாளில் ஈற்றீல் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன் அன்பும் நல்குவீர் -ஆமென்

## திருமாங்கல்யத்தை ஆசீர்வதித்து ஏறெடுக்கும் ஜெபம்:

இரக்கமுள்ள ஆண்டவரே, இந்த திருமாங்கல்யத்தை அணிவிக்கும் **டிஜோ மதிசெல்வன்** அணிந்து கொள்ளும் **ஜெஸிபர்** ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்கவும் தங்கள் ஆயுள் முழுவதையும் அன்பில் நிலைத்திருக்கவும், இந்த திருமாங்கல்யத்தையும் இந்த மணமக்களையும் நீர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்!

**(திருமாங்கல்யம் தரிக்கப்படுகையில் இப்பாடலை பாடவும்)**

இந்த மங்களம் செழிக்கவே கிருபை செயும்
எங்கள் திரித்துவ தேவனே

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில்
சென்றம் பணத்தைக் கந்தரசமாகச்
செய்த விந்தை போல் இங்கேயும் வந்து

ஆதி தொடுத் தன்பை எடுத்தாய் -மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்
நீதி வரம் நாலுங் கொடுத்தாய் -பெற்றுப் பெருகி

நிற்க உலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத போதனே அந்தப்படி உன்

ஆதரவைக் கொண்டு சுதன் நீதியை நம்பிப் புரிந்த

தக்க ஆபிராமும் விண்டனன் அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்
முக்கிய ஆரன் நிலத்தண்டினன் நினைத்தப்படி

சக்கியமதாகக் கண்டனன்
பக்குவம் உரைத்திடாரே பக்காளும் ஈசாக்குவுகுத்
தக்க மண வாளியாகத் தந்து தயை செய்தாற்போல

சத்திய வேத்தின் வாசனே அருளு பரி
சுத்த சுவிசேட நேசனே
பக்தர்கள் பவ விமோசனே பழுதணுவும்
அற்ற கிறிஸ் தேசு ராசனே

வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும்
அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுப சோபனமாய்

**திருமாங்கல்யம் அணிவித்து குருவானவர் சொல்ல பின்பற்றி மணமகன் கூறுவது:**

இந்த திருமாங்கல்யத்தினாலே நான் உன்னை திருமணம் செய்து, என் சரீரத்தினாலே உன்னை மேன்மைப்படுத்துகிறேன். என்னையே உனக்கு அளிக்கிறேன். எனக்கு உண்டான உலக செல்வங்களை எல்லாம் உனக்கு சுதந்திரமாகக் கொடுக்கின்றேன்.

பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஆமென்!

**மணமக்கள் நின்று கொண்டிருக்க...**

**குருவானவர் அவர்கள் மணமக்கள் வலது கையை சேர்த்து சொல்வது...**

**கடவுள் இணைத்தவர்களை மனுஷன் எவனும் பிரிக்காதிருக்கக் கடவன்.**

குருவானவர் ஜனங்களைப் பார்த்து சொல்ல வேண்டியதாவது...

தூய திருமண நிலைமையில் ஒருமித்து வாழ சம்மதித்து கடவுளுடைய சந்நிதியிலும், இந்த சபைக்கு முன்பாகவும் அதை அறிக்கையிட்டு, ஒருவொருக்கொருவர் வாக்குக்கொடுத்து உறுதிக்கு அடையாளமாக மாங்கல்யத்தை தரித்து கைப் பிடித்து தெரியப்படுத்தினதனாலே இவர்கள் திருச்சபையின் ஒழுங்குபடியும் இந்திய நாட்டின் சட்டப்படியும் கணவனும், மனைவியுமாக இருக்கிறார்கள் என்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அறிவிக்கிறேன். ஆமென்!

**ஜெபம் பண்ணக்கடவோம்!**

மனுக்குலம் அனைத்தையும் படைத்து காப்பாற்றுகிற அநாதி தேவனே, ஆவிக்குரிய எல்லா நன்மைகளையும் ஈகிற கருணாகரனே, நித்திய ஜூவனுக்கு காரணமாகிய கடவுளே, ஈசாக்கும் ரெபேக்காளும் உண்மையாய் ஒருமித்து வாழ்ந்ததுபோல் உமது நாமத்தில் நாங்கள் ஆசீர்வதிக்கிற இந்த கணவனும் மனைவியும் இந்த திருமாங்கல்யத்தை அடையாளமாகவும், அக்தாட்சியா கவும் மணமகன் தரிப்பிக்க மணமகள் தரித்து கொண்டதினாலே தங்களுக்குள்ளே செய்த உடன்படிக்கையை உறுதியாய் கைக் கொண்டு நிறைவேற்றி எப்போது பூரண அன்பும் சமாதானமும் உள்ளவர்களாகய் ஒருமித்து வாழ்ந்து உமது கற்பனைகளின்படி நடக்க எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இவர்கள் மேல் உமது ஆசீர்வாதத்தை பொழிந்தருளும். **ஆமென்!**

## மணமக்கள் தலையில் கைவைத்து குருவானவர் சொல்ல வேண்டிய ஆசீர்வாதம்!

தேவனாகிய பிதா! தேவனாகிய குமாரன்! தேவனாகிய பரிசுத்த ஆவி! உங்களை ஆசீர்வதித்து காத்து ஆதரிக்கக் கடவர்! கர்த்தர் கிருபைகூர்ந்து உங்களை இரக்கமாய் கண்ணோக்ககடவர். நீங்கள் மறுமையிலே நித்திய ஜீவனை அடைய தக்கதாக இம்மையிலே ஒருவருக்கொருவர் ஆதரவாக வாழும்படி

கர்த்தர் உங்களை சகல ஆசீர்வாதத்தினாலும் கிருபையினாலும் நிரப்பக்கடவர். ஆமென்!

**மணமக்கள் குருவனவரால் வழிநடத்தப்பட்டு நற்கருணை கிராதியில் முழங்கால்படியிடுவார்கள்!**

**சங்கீதம் 128:1-6** (பாடகர் குழு  ராகத்துடன் )

1. கர்த்தருக்கு பயந்து, / அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ பாக்கியவான்.

2. உன் கைகளின் பிரயாசத்தை நீ, / சாப்பிடுவாய். உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

3. உன் மனைவி, / உன் வீட்டோரங்களில் கனி தரும் திராட்சை கொடியைப் போல் , / இருப்பாள். உன் பிள்ளைகள், / உன் பந்தியை சுற்றிலும், / ஒலிவ மரக்கன்றுகளைப் போலிருப்பார்கள்.

4. இதோ , / கர்த்தருக்கு பயப்படுகிற , / மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

5. கர்த்தர் / சீயோனிலிருந்து உன்னை , / ஆசீர்வதிப்பார். நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் , / வாழ்வைக் காண்பாய்!

6. நீ, / உன் பிள்ளைகளின் பிள்ளை , /களையும்
இஸ்ரவேலுக்கு சமாதானத் / தையும் காண்பாய்.

பிதாவுக்கும், / குமாரனுக்கும், / பரிசுத்த ஆவிக்கும்
மகிமை உண்டாவதாக!
ஆதியிலும், / இப்பொழுதும், / எப்பொழுதுமான, / சதா
காலங்களிலும், மகிமை, / உண்டாவதாக. ஆமென்!

**பாடல் கீ 278 - பயந்து கர்த்தரின் பக்தி வழியில்**

பயந்து கர்த்தரின் பக்தி வழியில்
பணிந்து நடப்போன் பாக்கியவான்
முயன்று உழைத்தே பலனை உண்டான்
முடிவில் பாக்கியம் மேன்மைக் காண்பான்

1. உண்ணுதற்கினிய கனிகளைத் தரும்
தன்னிழல் திராட்சை செடி கொடி போல் வளரும்
கன்னிய மனைவி மகிழ்ந்திருப்பாள்
என்னரும் நலன்கள் இல்லத்தில் புரிவாள்

2. ஒலிவ மரத்தை சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளம் கன்றுகள் போலே
மெலிவிலா நல்ல பாலருன் போலே
மிகவும் களித்து வாழ்வர் அன்பாலே

3. கர்த்தரும் வீட்டை கட்டாவிடில் அதை
கட்டுவோர் முயற்சி வீணாம் அறி இதை
கர்த்தரால் வரும் சுதந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை

ஜெபம் பண்ணக்கடவோம்!

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்!**
**கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்!**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்! எங்களுக்கு விரோதமாய் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே! ஆமென்!!

**குரு:** கர்த்தாவே, உமது அடியானாகிய, உமது அடியாளுமாகிய இவர்களை இரட்சியும்!
**மறுமொழி:** இவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.

**குரு:** ஆண்டவரே! உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இவர்களுக்குச் சகாயத்தை அனுப்பும்!
**மறுமொழி:** இவர்களை என்றென்றைக்கும் காப்பாற்றியருளும்.

**குரு:** இவர்களுக்கு பலத்த அரணாயிரும்!
**மறுமொழி:** சத்துருவின் முகத்திற்கு இவர்களை மறைத்தருளும்!

**குரு:** கர்த்தாவே எங்கள் ஜெபத்தைக் கேளும்!
**மறுமொழி:** எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் வருவதாக!

**ஜெபம் செய்வோம்!**

ஆபிரகாமின் தேவனே! ஈசாக்கின் தேவனே! யாக்கோபின் தேவனே! உமது அடியாராகிய இவர்களை ஆசீர்வதித்து இவர்கள் உமது பரிசுத்த வசனத்தினால் கற்றுக் கொள்ளும் பிரயோஜனமான காரியங்கள் எவைகளோ, அவைகளின்படி உண்மையாய் நடக்க நித்திய ஜீவ விதையை இவர்கள் இருதயத்திலே விதைத்தருளும்! ஆண்டவரே! பரலோகத்திலிருந்து இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி ஆசீர்வதியும்.

ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாக தேவரீர் உமது ஆசீர்வாதத்தை அருளினது போல உமது அடியாராகிய உமது சித்தத்திற்கு அடங்கி நடந்து எப்பொழுதும் தேவரீராலே சேதமின்றிக் காக்கப்பட்டு ஜீவனுள்ளளவும் உம்மில் அன்பு கூறுகிறவர்களாய் நிலைத்திருக்கும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமது

ஆசீர்வாதத்தை இவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும்.! ஆமென்!!

பரமபிதாவே, இரக்கமுள்ள கர்த்தாவே, மனுக்குலம் விருத்தியாகிறது. தேவரீர் அளிக்கும் வரமாயிருக்கிறது. இவர்கள் புத்திர பாக்கியம் அடைந்து, உமக்குத் துதியும் கனமும் உண்டாக அந்தப் பிள்ளைகள் கிறிஸ்துமார்க்கத்திற்கேற்ற சன்மார்க்காய் வளரவும், தேவ அன்பும், நீதியும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழவும் இவர்கள் இருவருக்கும் உமது ஆசீர்வாதத்தை அருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்கின்றோம்! ஆமென்!!

ஒன்றுமில்லாதிருக்கையில் சர்வ வல்லமை யினால் அனைத்மையும் படைத்தவைகளை ஒழுங்கு படுத்தின் பின்பு உமது சாயலின்படியே படைக்கப்பட்ட மனிதனிலிருந்து பேண்ணை உருவாக்கி, அவர்களை ஒருக்காலும் பிரித்துவிடக் கூடாதென்று கற்பித்து அருளினீர். கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபைக்கும் உள்ள ஐக்கியத்தையும் ஞான விவாகத்தையும் காட்டத்தக்கதாய் விவாக நிலைமையை மேன்மையான ரகசியமாக நியமித்தீர். கிறிஸ்து தமது மணவாட்டியாக திருச்சபையில் அன்பு கூர்ந்து அதற்காககத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்து தமது சொந்த சரீரமாக அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறது போல, இந்த கணவனும் உமது

வசனத்தின்படி தன் மனைவியில் அன்பு கூறவும் இந்த பெண்ணும் தன் கணவனிடத்தில் அன்பும், பட்சமும், உண்மையும், பணிவும் உள்ளவர்களாய் இருக்கவும் எப்போதும் அமைதலும் அடக்கமும் சமாதானமும் உள்ளவர்களாய் தேவ பக்தியுள்ள பெண்களைப் பின்பற்றவும், உமது அடியாராகிய இவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணும். கர்த்தாவே இவர்கள் உமது நித்திய ராஜ்ஜியத்தை சுதந்ரித்துக் கொள்ளும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கிருபை செய்தருளும். ஆமென்!

**ஆசீர்வாதம்**

ஆதியிலே நமது ஆதி தாய் தந்தையாகிய ஆதாம், ஏவாள் என்பவர்களைச் சிருஷ்டித்து விவாகத்தினாலே இணைத்து பரிசுத்தமாக்கின சர்வ வல்லமையுள்ள தேவன், நீங்கள் சரீரத்திலும் ஆத்துமத்திலும் தமக்குப் பிரியமாய் நடந்து உங்கள் ஜீவ காலபரியந்தம் பரிசுத்த அன்புடையவர்களாய் ஒருமித்து வாழத் தம்முடைய அருள் செல்வத்தை உங்கள் மேல் பொழிந்து உங்களை பரிசுத்தமாக்கி ஆசீர்வதிப்பாராக!

**ஆமென்! ஆமென்!! ஆமென்!!!**

**பாடல்**

**ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே**

1. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே
வீசீரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்

2. இம் மணவீட்டில் வாரீரோ ஏசு ராயரே
உம் மணம் வீசச் செய்யீரோ ஓங்கும் நேசமதால்
இம்மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விரு பேரையுங் காக்கவே
விண் மக்களாக நடக்கவே
வேந்தா நடத்துமே

3. இம் மணமக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும் ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடென் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித்தரிக்க
ஊக்கம் அருளுமே

4. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏசு ராஜனாம்
உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே

5. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தருளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்து துதித்தெம்மை என்றும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன்

6. ஞான விவாகம் எப்பொழுதும் ஞாபமாகவே
வான மணாளன் வாஞ்சித்து வாழ்க மனையாளை
ஆனந்தமாகவே தூய தன்மையதை
ஆடையாய் நீர் ஈயத்தரித்து
சேனையோடே நீர் வரையில்
சேர்ந்து நீர் சுகிக்கவே – வீசீரோ

அறிவிப்புகள் – கர்த்தருடைய வார்த்தை
Rev. A. John Wesley (Pastorate Chairman)
சிறப்பு விருந்தினர்
Rt.Rev.Devasagayam
Rtd Bishop CSI Tuticorin Nazareth Diocese
Rev .Wesley Jaya Sathya, ECI
Rev. Jebavasagan Rev. A. Davidraj
Rev. C. Emilsingh, Rev.Koilpitchai Davaraj
Rev. Dhanaseelan

**காணிக்கைப் பாடல்**

பாடல் - மணவாழ்வு புவி

மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
– மங்கள வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

சரணங்கள்

1. துணை பிரியாது, தோகையிம்மாது
துப மண மகளிவர் இதுபோது
மனமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது – நல்ல — மண

2. ஜீவ தயாகரா, சிருஷ்டியதிகாரா
தெய்வீக மாமண வலங்காரா,
தேவகுமாரா, திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தரா திருப்பீரா? – நல்ல — மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமாசாரம், அன்பு, உதாரம்
அம்புவி தனில் மனைக்கலங்காரம் – நல்ல — மண

4. மன்றல் செய் தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவர் குறையுமே தாவி
மன்றியிப் புவி யமர்ந்த சஞ்சீவி
அவளையில்லாதவ னொரு பாவி – நல்ல — மண

## ஜெபம் பண்ணக்கடவோம்

சர்வ வல்லவரே, நித்திய பிதாவே, திருமணமாகிய நியமத்தை மனுக் குலத்திற்குக் கொடுத்து உம்முடைய ஆசீர்வாதங்களால் அதைத் தூய்மைப்படுத்துகிறவரே, கணவனும், மனைவியுமாய் இப்பொழுது சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும் உமது அடியார்களான .... **டிஜோ மதிசெல்வன்** (மணமகன்) **ஜெஸிபர்** (மணமகள்) ஆகிய இவர்களை ஆசீர்வதியும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவர் மகிழ்ச்சியை ஒருவர் பகிர்ந்து, தங்கள் வீட்டின் கடமைகளைச் சேர்ந்து நிறைவேற்றி, அன்பிலும் உம்முடைய வார்த்தைக்குக் கீழ்படிவதிலும், இவர்கள் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்க இவர்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்!

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவே, நாசரேத்தில் குடும்ப வாழ்க்கையில் பங்கு கொண்டவரே, இந்த உமது அடியாருடைய வீட்டில் ஆண்டவரும் அரசனுமாய் ஆட்சி புரியும். நீர் மனிதனுக்குச் சேவை செய்தபடியே இவர்களும் பிறருக்கு சேவை புரிய அருள் தாரும். சொல்லாலும், செயலாலும் இவர்கள் அயலாகத்தாருக்கு உம்முடைய மீட்பின் அன்புக்குச் சாட்சிகளாயிருக்க அருள்புரியும். பிதாவோடும், பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாய்

என்றென்றைக்கும் ஜீவித் அரசாளுகிற உமது பரிசுத்த நாமத்தில் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்!

**ஆசீர்வாத ஜெபம்**

சமதானத்தோடு புறப்பட்டு போங்கள். திடனற்றவர்களை தேற்றுங்கள்! பலவீனரைத் தாங்குங்கள்! எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருங்கள்! ஒருவரும் மற்றொருவர் செய்யும் தீமைக்கு தீமை செய்யாதபடி பாருங்கள்! துன்பப்படுகிற வர்களுக்கு உதவி செய்யுங்கள்! எல்லா மனிதரையும் கனம் பண்ணுங்கள்! பரிசுத்தாவியின் வல்லமையில் களிகூர்ந்து கர்த்தரில் அன்பு கூர்ந்து அவரையே சேவிப்பீர்களாக!

**பிதா, குமாரன், தூய ஆவியானவரான சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் ஆசீர்வாதம் உங்கள் மேல் தங்கி, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக் கடவது!**

**ஆ...மென்! ஆ...மென்!! ஆஆஆ....மென்!!**

**பின்பவனி** - ஆ நல்ல சோபனம்

1. ஆ நல்ல சோபனம்
அன்பாக இயேசுவும்
ஆசீர்வதித்து மகிழும்
கானாக் கலியாணம்

2. நேசர் தாமே பக்கம்
நின்றாசீர்வதிக்கும்
மணவாளன் மணமகள்
மா பாக்கியராவார்

3. அன்றுமைக் காணவும்
ஆறு ஜாடித் தண்ணீர்
அற்புத ரசமாகவும்
ஆண்டவா நீர் செய்தீர்

4. நீரே எங்கள் நேசம்
நித்திய ஜீவன் தாரும்
என்றும் தங்கும் மெய் பாக்கியம்
இன்றே ஈய வாரும்

5. ஏதேன் மணமக்கள்
ஏற்ற ஆசீர்வாதம்
இயேசு இவர் பக்கம் நின்று
ஊற்றும் இவர் மீது

6. என்றும் காத்தருளும்
ஒன்றாய் இணைத்தோனே
என்றும் சிலுவையாசனம்
முன் கெஞ்சி நிற்கிறோம்

Verse 1

மங்களம் செழிக்க கிருபை
Mangalam Sezhikka

**பல்லவி**
மங்களம் செழிக்க கிருபை
அருளும் மங்கள நாதனே

**சரணங்கள்**
1. மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுத் கத்தனாம் ஆபிராம் தேவ நீ

2. மங்கள மணமகன் **டிஜோ மதிசெல்வனு**-க்கும்
மங்கள மணமகள் **ஜெஸிபரு**-க்கும்
மானுவேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே – உனைத்
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
இத்தரை இத் திருமணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே

நல்வாழ்த்துக்களுடன்,
**சபையார் பண்ணைவிளை**

எங்களது அழைப்பினை ஏற்று திருமண ஆராதனையில் பங்கு பெற்று மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பித்த உங்கள் யாவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

அன்புடன்,
வசீகரன் ஜாண் குடும்பத்தார்
திரு. கலைச்செல்வன் குடும்பத்தார்
(மணமகன் வீட்டார், மணமகள் வீட்டார்)